**வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் - 2018**

---

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2639–எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுற்படுத்தல் முகவராகும். செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 197.80 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகளை புனரமைத்து முன்னேற்றுவதே செயறதிட்டத்தின் நோக்கமாகும்.செயற்திட்ட நடவடிக்கைகள் குறிப்பாக சிவில் வேலைகள், உசாவுகை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் என 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 20,690 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 176 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 18,850 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 160 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 31 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட 20 ஒப்பந்தக்காரர்களிற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 51.20 | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 146.23 மில்லியன் தொகையான அட்டுறு செலவினங்கள் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் இறுதி மீதியின் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகை கருத்திற்கொள்ளப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆம் திகதிய 5 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை | வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளின் துல்லியத்தன்மை | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை | செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் சரியான நிலையை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வால் செயற்திட்டக் கொடுக்கல்வாங்கல்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

169.94 கிலோமீற்றர்கள் நீளமான வட மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள 06 தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் செயற்திட்டத்தின் ஆரம்ப அமுலாக்கல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கும் மேற்குறித்த மாகாணங்களில் 117.48 கிலோ மீற்றர்கள் நீளமான 07 ஏனைய தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் கீழ் 2016 திசெம்பர் 31 வரையில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும், ஆரம்ப கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 1,842.93 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளின் சேமிப்புகளைப் பயன்படுத்தி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய 03 தேசிய வீதிகளின் 25.15 கிலோ மீற்றர்கள் அளவிலான புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பெறப்பட்ட தகவல்களின் படி, மேலதிக நிதி உடன்படிக்கை மற்றும் ஏனைய தேசிய வீதிகளின் புனரமைப்பிற்காக 2019 இல் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடுகளில் ரூபா 907.31 மில்லியன் தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் செலவிடப்படாதிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| வீதிகளின் புனரமைப்பிற்காக மதிப்பிடப்பட்ட கிரயங்களின் சேமிப்புகளைப் பயன்படுத்துவதற்காக செயற்திட்டத்தின் நோக்கெல்லை 03 சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்ததுடன் | ஒப்பந்தக் கிரய மதிப்பீடு மீதான நிதிக் கட்டுப்பாடு நலிவாகக் காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நோக்கங்களிற்காக நிதிப் பயன்பாட்டை உச்சப்படுத்துவதற்காக ஒவ்வொரு பொதியின் கிரய மதிப்பீட்டின் மீது முறையான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 23.35 கிலோமீற்றர் அளவிலான திம்புலாகல முதல் தோணிகல வீதி மற்றும் தோணிகல முதல் கல்குளம் வீதியின் 24.17 கிலோமீற்றர்களின் செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தங்கள் முறையே 20.40 மில்லியன் தொகைக்கும் 5.30 மில்லியன் தொகையான மதிப்பீட்டுக் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், சம அளவிலான வீதிகளில் பாரிய அளவிலான மாற்றங்கள் ஏற்படக் காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை | விலை மதிப்பீட்டு நோக்கங்களிற்காக முறையான முறைமை ஒன்று இன்மையால் செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட ஒப்பந்தங்களின் கிரயம் நியாயமற்ற முறையில் உயர்வடைந்திருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தெளிவான நடைமுறைகளும் வீதிப் பராமரிப்பு முறைமையும் ஸ்தாபிக்கப்பட்டு அதன்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |